சார்பு நீதிமன்றம், குளித்தலை

OS.No. **255 / 2022**

பெயர்: ஈஸ்வரன் வா.சா.1 தேதி **04.03.2026**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. நானும், பிரதிவாதிகளும் ஒரே ஊரை சேர்ந்தவர்கள் தான். இரண்டாவது பிரதிவாதிக்கும், அவரது தகப்பனாருக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை பார்க்காமல் பணம் கொடுத்தேனா என்றால் தாவா சொத்துக்களை பற்றி தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தை எந்த மூல ஆவணத்தை கொண்டு எழுதப்பட்டது என்றால் பிரதிவாதிகள் சொன்ன சங்கதியை வைத்து எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதியதற்கு பின்னிட்ட வழக்கு சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியப்பட்டது என்கின்ற சங்கதிக்கு ஆதரவாக வில்லங்க சான்றிதழ் எதனையும் பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்றால் 08.01.2018ம் தேதி வாங்கப்பட்டது. மேற்படிதேதியில் எத்தனை பத்திரங்கள் வாங்கப்பட்டது என்றால் இரண்டு பத்திரங்கள் வாங்கப்பட்டது. மேற்படி இரண்டு பத்திரங்களையும் யார் பெயரில் வாங்கினேன் என்றால் எனது பெயரில் தான் வாங்கினேன்.

2. மேற்படி இரண்டு பத்திரங்களையும் யார் வாங்கினார்கள் என்றால் நான் தான் வாங்கினேன். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகளை யார் எழுதினார்கள் என்றால் எனது அண்ணன் சாமிநாதன் எழுதினார். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி எழுதப்பட்டது என்றால் பிரதிவாதிகள் சொல்லி எழுதப்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சங்கதிகளை பிரதிவாதிகள் சொல்லவில்லை என்றாலும் நாங்களாகவே எழுதி கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் ரெவன்யூ ஸ்டாம்ப் யார் வாங்கனார்கள் என்றால் நான் தான் வாங்கி வந்தேன். எந்த தேதியில் எத்தனை ஸ்டாம்ப் வாங்கினேன் என்றால் 8-ம் தேதி ஒரு ஸ்டாம்ப் வாங்கினேன். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் தர்மலிங்கம், பொன்னம்பலம் கையொப்பம் செய்தார்கள். அவர்களை பிரதிவாதிகள் தான் அழைத்து வந்தார்கள். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் சாட்சிகளை தவிற வேற யாரும் கையெழுத்து செய்தார்கள் என்றால் பிரதிவாதிகள் கையொப்பம் செய்தார்கள். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிகள் கையொப்பம் எதுவும் செய்யவில்லை என்றாலும் நாங்களே மேற்படி கையெழுத்தை மோசடியாக எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மேற்படி

சொத்த சம்பந்தமாக ஏதேனும் வில்லங்கம் ஏற்படும்போது நானும் எனது வாரிசுகளும் முன்னின்று தீர்த்து கொடுப்போம் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.127/1-ல் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது.

3. தாவா சொத்தின் நான்குமால் என்னவென்றால் குமளி வாய்க்காலுக்கு வடக்கே தங்கவேல் காட்டிற்கு கிழக்கே, செந்தில் காட்டிற்கு மேற்கே, பாசன வாய்க்காலுக்கு தெற்கு உள்ளது. தாவா சொத்தை நான் அனுபவம் செய்திருந்தால் மேற்படி நான்கெல்லை சரியாக சொல்லிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் அனுபவம் செய்து வருவதற்காக வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் கணினி சிட்டாவில் சர்வே எண்.127/1A-ல் காண்பிக்கப்படும் பூமியானது தங்கவேல் மனைவி ரூக்மணி பெயரில் என்றால் அப்படிதான் குறிப்பிக்கப்பட்டுள்ளது. என்னுடைய வழக்குரையில் சர்வே எண்.125/1 என குறிப்பிட்டு சொல்லப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் கணினி சிட்டாவில் சர்வே எண்.125/1-ல் காண்பிக்கப்படும் பூமியானது ராஜமய்யர் மகன் சீத்தராமன் பெயரில் உள்ளது என்றால் அப்படிதான் குறிப்பிக்கப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண். 125/1 பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் நிரூபணம் வாக்குமூலத்தை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். மேற்படி நிரூபணம் வாக்குமூலத்தில் சர்வே எண்.120/1-கட்டுபட்ட 70 செண்ட் நிலத்தை வட்டிக்கு ஈடாக என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.120/1 பூமியானது யார் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதிகள் சொன்னதை நாங்கள் எழுதினோம். 11.01.2018-ம் தேதி தாவா சொத்தை பிரதிவாதிகள் அனுபவம் செய்ய விடாமல் தடை செய்தார்கள் என்று சொல்லிவிட்டு 04.11.2018 அன்று நானும் நளினியும் எனது அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு பணம் கொடுத்தோம் என்றால் அவசரம் என்று கேட்டதால் கொடுத்தோம்.

4. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் பிரதிவாதிகள் கையொப்பமிட்டத்தாக சொல்ல கூடிய கையெழுத்துகள் ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். அ.வ.256/2022 என்கின்ற வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஒரு கையொப்பம் ஆங்கிலத்திலும், ஒரு கையொப்பம் தமிழிலும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்ததானது குளித்தலை தாலுக்காவில் அமைந்துள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை நான் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து பதிய கூடாது என ஆணை எதுவும் உண்டா என்றால் இல்லை. தாவா சொத்தை பதிவு செய்து கொடுக்கும்படி பிரதிவாதிகளை அழைத்தேனா என்றால் அழைத்தேன். எந்த

தேதியில் அழைத்தேன் என்றால் வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிய அன்றை கேட்டேன். உள் ஊரியில் இருப்பதால் பதிவு செய்யவேண்டியதில்லை என்று பிரதிவாதிகள் சொன்னார்கள். பிரதிவாதிகளை பதிவு செய்ய அழைக்கும்பொழுது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் உடன் இருந்தார்கள். மேற்படி சாட்சி கையொப்பம் போட்டவர்கள் தவிர வேறு யாரையும் அழைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையொப்பம் செய்துள்ள நபர்கள் எனக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால் சரியல்ல.

5. இரண்டாவது பிரதிவாதியின் தகப்பனார் காலத்தில் மீட்கப்பட்ட பத்திரத்தை யார் எழுதினார் என்றால் யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்படி மீட்கப்பட்ட பத்திரத்தில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சங்கதி எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் காலத்தில் எவ்வித போக்கியமும் வைக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி எனது தகப்பனார் காலத்தில் வைக்கப்பட்ட ஆவணத்தில் என்னிடம் செலுத்தி போக்கியத்தை திரும்ப பெற்றுக்கொண்டார்கள் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. எனது தகப்பனார் காலத்தில் வைக்கப்பட்ட போக்கிய பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் இல்லை. மேற்படி போக்கிய பத்திரம் காலாவதிஆகி விட்டபடியால் அதே கருத்தை கொண்டு வா.சா-ஆ.1 ஆவணம் தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN
Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.03.04 17:19:08 +0530

சார்பு நீதிபதி
குளித்தலை.